ஒன்றல்ல இரண்டல்ல நூறாயிரம் எங்கள்
சொந்தங்கள் அழிந்தது பெரும் துயரம்

என்னாளும் நினைத்து நினைத்து அழுது துடிக்கிறோம்
அந்த முள்ளி வாய்கால் சோகம் தன்னை நினைத்து அழுகிறோம் 2

உண்ணவும் உணவில்லாமல் உடுக்கவும் உடையில்லாமல்
உறங்கவும் முடியாமல் தவித்தார்கள்
காயத்துக்கு மருந்தில்லாமல் கட்டி அழ முடியாமல்
கொத்துக்குண்டு நடுவினிலே குளித்தார்கள்
ஒப்பாரி குறையாமல் கொள்ளி வைக்க முடியாமல்
உறவினை இழந்து நின்று தவித்தார்கள் 2

சிதறிய உடலங்களை போட்ரெரிக்க முடியாமல்
பாத்திருந்து அழுதழுது நொந்தார்கள்
குண்டு மழை நடுவினிலே சாவுக்குள்ளே நடுநடுங்கி
ஊடமைகள் இழந்து நின்று துடித்தார்கள்
வணங்காமன் கப்பலிலே அனுப்பிவைத்த உணவுகளோ
வரும் என்று ஏமாந்து போனார்கள் 2

கையிழந்து காலிழந்து சொத்திழந்து சுகம்மிழந்து
வீதியிலே நடைப்பிணமாய் கிடந்தார்கள்
வந்த பகை நடுவினிலே சிக்குண்டு போனார்கள்
வன்னிமண் சோலைவனம் இழந்தார்கள்
கம்பி வேலிக்குள்ளே நின்று சொந்தங்கள் வரும் என்று
காத்திருந்து பாத்திருந்து அழுதார்கள் 2

இசைத்தட்டு :
பதிப்பகம் : அகம்